**சுருக்கம்**

முதலமைச்சரின் அறிவிப்பு – சென்னை மாவட்டம் – சென்னை மாநகராட்சிக்குட்பட்ட டர்ன்புல்ஸ் சாலை – செனடாப் சாலைச் சந்திப்பு மேம்பாலத்திற்கு ஜி.கே.மூப்பனார் மேம்பாலம் எனவும், ஆலந்தூர் சாலை மேம்பாலத்திற்கு “ஆலந்தூர் ஆபிரகாம் மேம்பாலம்” எனவும் ஜோன்ஸ் சாலை வாகன சுரங்கப்பாதைக்கு “சி.பி.பவள வண்ணன் சுரங்கப்பாதை “ என பெயர் சூட்டிட அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

**அரசாணை(நிலை) எண்.11** **நாள் 13.1.2010**

**தை–29, திருவள்ளுவர் ஆண்டு–2040**

**படிக்கப்பட்டது**:

1. அரசாணை (நிலை) எண்.113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை, நாள் 30.6.1998.
2. அரசாணை (ப) எண்.573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.12.2001.

**மேலும் படிக்க:**

3. சென்னை மாநகராட்சி ஆணையர் கடித எண்.நி.ம.உ.து. ந.க.எண். எல்இ1/ 5430/2009, நாள் 31.12.2009.

-----

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 11.12.2009 அன்று நடைபெற்ற ஆலந்தூர் சாலை மேம்பாலம், ஜோன்ஸ் சாலை வாகன சுரங்கப்பாதை, டர்ன்புல்ஸ் சாலை – செனடாப் சாலைச் சந்திப்பு மேம்பால திறப்பு விழா நிகழ்ச்சியின் சிறப்புரையில் கீழ்க்கண்டவாறு அறிவித்து இருந்தார்.

1. “காங்கிரஸ் கட்சியின் வேண்டுகோளை ஏற்று டர்ன்புல்ஸ் சாலை – செனடாப் சாலைச் சந்திப்பு மேம்பாலத்திற்கு “மூப்பனார் மேம்பாலம்” என்று பெயர் சூட்டுகிறேன்.

2. ஏழை எளிய மக்களுக்காக அரும்பாடுபட்டு திடீரென்று நம்மை விட்டு மறைந்துவிட்ட மாவீரன் ஆபிரகாம் நினைவாக ஆலந்தூர் சாலை மேம்பாலத்திற்கு “ஆலந்தூர் ஆபிரகாம் மேம்பாலம்” என்று பெயர் சூட்டுகிறேன்.

3. ஜோன்ஸ் சாலை வாகன சுரங்கப்பாதை அமைந்துள்ள வட்டாரத்திலேயே மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்து, என்னுடைய உயிர்த்துடிப்பாகவே வாழ்ந்து மறைந்த தம்பி பவள வண்ணன் பெயரால் ஜோன்ஸ் சாலை வாகன சுரங்கப்பாதைக்கு “பவள வண்ணன் சுரங்கப்பாதை “ என்று பெயரிடுகிறேன்”.

2. சென்னை மாநகராட்சி ஆணையர் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சித் தீர்மான எண்.494, நாள் 31.12.2009-ல் முதலமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்த சென்னை மாநகராட்சி மன்றத்தில் கீழ்வரும் மேம்பாலங்களுக்கும், சுரங்கப்பாதை சாலைக்கும் பெயர் சூட்டுவதற்கு அரசின் ஆணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்ப மன்றம் அனுமதி அளித்துள்ளது எனவும், எனவே இதற்கு அரசின் ஆணை வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

1. மண்டலம் -8, வார்டு -116-ல் அமைந்துள்ள டர்ன்புல்ஸ் சாலை - செனடாப் சாலைச் சந்திப்பு மேம்பாலத்திற்கு "ஜி.கே.மூப்பனார் மேம்பாலம் என்று பெயர் வைக்கவும்,

2. மண்டலம்-9, வார்டு எண்.135 & 140-ல் ஆலந்தூர் சாலை மேம்பாலத்திற்கு "ஆலந்தூர் ஆபிரகாம் மேம்பாலம்" என்று பெயர் வைக்கவும் மற்றும்

3. மண்டலம்-9, வார்டு 134 & 138-ல் ஜோன்ஸ் சாலை வாகன சுரங்கப் பாதைக்கு "பவள வண்ணன் சுரங்கப்பாதை " என்று பெயர் வைக்கவும்.

3. முதலாவதாக மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசு ஆணைகள் நடைமுறையில் உள்ள சூழ்நிலையில், சென்னை மாநகராட்சி ஆணையரது முன்மொழிவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது, அதனடிப்படையில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட "டர்ன்புல்ஸ் சாலை - செனடாப் சாலைச் சந்திப்பு மேம்பாலத்திற்கு ஜி.கே.மூப்பனார் மேம்பாலம் எனவும், ஆலந்தூர் சாலை மேம்பாலத்திற்கு "ஆலந்தூர் ஆபிரகாம் மேம்பாலம்" எனவும் ஜோன்ஸ் சாலை வாகன சுரங்கப்பாதைக்கு "சி.பி.பவள வண்ணன் சுரங்கப்பாதை " என பெயர் சூட்டிட சென்னை மாநகராட்சிக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-600 003.
சென்னை மாவட்ட ஆட்சியர், சென்ன்னை- 600 001.

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை-600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலர், சென்னை- 600 009.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை- 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளரின் தனிச்செயலர், சென்னை-600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (அந2) துறை, சென்னை-600 009.
இ.கோ/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.